

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதால் தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து எம்டிசி பேருந்துகளை இயக்குவது தொடர்பாகவும், பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாகவும், துறை சார்ந்த உயர் அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று (9.9.2025) இராயபுரம் மண்டல அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர். பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக் குழுத்தலைவர் (நகரமைப்பு) இளைய அருணா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் (இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம்) சார்பில் இளைஞர்கள் கருத்தரங்கம்!

## மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஆலோசகர் டாக்டர். பொன்ராஜ் சிறப்புரை!

சென்னை, செப்.10

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் IDRM இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில் இளைஞர்களுக்கான மாபெரும் கருத்தரங்கம் 11/09/25 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் சென்னை, ஏழுகிணறு குளோப் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் IDRM அறக்கட்டளை உறுப்பினர் மு.துரைபாண்டியன் தலைமையில் தமிழ் நாட்டை முதலீட்டில், வளர்ச்சி பாதையில் நடைபோட வைத்தது யார்? என்ற தலைப்பில் மேனாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அலோசகர்) IDRM Convenorருமான பொன்ராஜ் வெள்ளைச்சாமி.. இன்றைய சனநாயக அரசியலின் தமிழ் நாட்டின் பங்கை நிலையைப் பற்றி இளைஞர்களிடையே உரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் IDRM செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் சு. குமார் நன்றி கூறுகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி. டாக்டர். கலாநிதி வீராசாமி எம்பி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், இ.பரந்தாமன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பா.ரங்கநாதன், எம் விஜயகுமார், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, பி.கே. மூர்த்தி, சி.மகேஷ் குமார், சங்கரி நாராயணன், எஸ். மணிமுடி, கே.எஸ்.எம். நாதன், என்.பி.எம் ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி, மாவட்ட நிர்வாகிகள் கோ. ஏகப்பன், தேவ.ஜவஹர், ஜி எம் தேவன், புனிதவதி எத்திராசன், பகுதி கழகச் செயலாளர்கள்: எஸ் ராஜசேகர் எஸ் முரளி ஐ.சி.எப்வ. முரளிதரன், எ. நாகராசன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி. ஆர். நாகராஜ், வே. வாசு, செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள்: எம் இப்ராஹிம் கனி, இரா கலைச்செல்வி எஸ். பன்னீர் செல்வம், கோ. மணி, பி.ஜெ. துளசிங்கம் பி. உதயசங்கர்,ரமேஷ் (எ) நீலகண்டன், டி.வி, செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ் குமார், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, நிர்மலாதேவி, வானவில் விஜய், பா.ஜெகதீஷ், கா. வினோத், ஜி.ஜே.பிரபு, எஸ்.தன சேகர். ஆர்.டி.சங்கர் நானா, பி. ஸ்ரீராமுலு, பி. விஜயகுமார், பா.பிரதீப் குமார் எம் விநாயகம், எல். சம்பத் குமார், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவல்லி, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், ஜி. தாமோதரன், துரைக்கண்ணன்.எம். பொரோஸ்கான், ம.அசோக் குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், மற்றும் ராஜேஷ் ஜெயின்.எம்.சி, வெ.பரிமளம்.எம்.சி, எல்.நவீன்.எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி நிர்வாகிகள் மே ஜனார்த்தனன் கே ஆர் அபரஞ்சி மா முத்து குமார் நா சுந்தரம் எஸ் சந்தியாகு, தமிழ் வாணன் வி சந்தான லட்சுமி சீபா ஜெயராமன் வட்டக் கழக செயலாளர்கள் மா.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாக ரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், த.கதிரவன், ம.பரத் குமார், க.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், ஜி.ராமமூர்த்தி பா.அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்கான

# சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்திட வல்லுநர் குழு அமைப்பு!

## அரசாணை வெளியீடு! அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, செப்.10

முதலமைச்சர் அவர்கள் கடந்த 11.08.2025 அன்று திருப்பூர் மாவட்ட கள ஆய்வின்போது விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்கு ஏதுவாக வல்லுனர் குழு அமைத்து வெளியிடப்பட்டுள்ளது என்று சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த 1962ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டது. மேற்படி ஆலை தினசரி 1,250 டன்கள் அரவைத் திறனுடனும், 2.15 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆண்டு அரவைத் திறனுடனும் ஆரம்பிக்கப்பட்டது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வளாகத்தில் தினசரி 55,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எரிசாராய உற்பத்தி ஆலையும், 30,000 லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட எத்தனால் ஆலையும் செயல்பட்டு வருகிறது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரவைக்கு போதுமான கரும்பு இல்லாத காரணத்தாலும், சுமார் 60 ஆண்டுகள் பழமையான இயந்திரங்களின் காரணமாக அரவையின்போது அடிக்கடி ஏற்பட்ட இயந்திர கோளாறுகள் காரணமாகவும் கடந்த 202324 அரவைப் பருவம் முதல் தற்காலிகமாக ஆலை இயங்காமல் இருந்து வருகிறது.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதிகளைச் சார்ந்த விவசாயிகள், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைத்து மீண்டும் இயக்க வேண்டுமென தொடர்ந்து அரசிடம் வலியுறுத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக, கடந்த 11.08.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டபோது, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியைச் சார்ந்த விவசாயிகள் டு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கு கோரிக்கை வைத்தனர். விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக ஏற்று, அன்றைய தினமே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் புனரமைத்து மீண்டும் இயக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஏதுவாக ஒரு வல்லுனர் குழு அமைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, தற்போது சர்க்கரைத்துறை இயக்குநர் தலைமையில் கூடுதல் இயக்குநர், சர்க்கரைத் துறை, தொழில்நுட்பம் சார்ந்த உயர் அலுவலர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள், கரும்பு இனப்பெருக்க நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆகியோரை உள்ளடக்கிய பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு வல்லுனர் குழு அமைத்து அரசாணை வெளியிட உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள வல்லுனர் குழு அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஆய்வு செய்து, விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரது கருத்துக்களையும் கேட்டறிந்து அரசுக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்கும். அந்தக் குழு அறிக்கையின் அடிப்படையில், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்குவது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படுமென சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் தெரிவித்தார்.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு ஆலோசனைப்படி, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட சாஸ்திரி நகர் பகுதியில் அதிதீவிர தூய்மை பணி, தி.மு.க அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில் நடைபெற்றது, பின்னர் பணிபுரிந்த மாநகராட்சி பணியாளர்களுக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது, உடன் கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், துப்புரவு ஆய்வாளர் ஏ. தினகரன், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர் எஸ்.சுரேஷ் மின்துறை பொறியாளர் கே. கந்தன், மின்சாரத் துறை பொறியாளர் எஸ்.வேலுமணி, சுகாதாரத் துறை ஆய்வாளர் எஸ். கார்த்திக், காவல்துறை (G3) காவல் நிலையம் உதவி ஆய்வாளர் ஐ.கருணாகரன், மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் இருந்தனர்.

### கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு

# தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக உயர்வு!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை,செப்.10-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (09.09.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.



இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்தியாவிலேயே உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஜூலை 2025 வரை உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 20.35 கோடி ஆகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 7.80 இலட்சம் ஆகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, பண்பாடு சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா மற்றும் UNESCO போன்ற புராதன சின்னங்கள் சுற்றுலா என பல்வேறு வகையான சுற்றுலாத் தளங்கள் அமையப் பெற்றுள்ளதால், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ஆண்டுதோறும் வெகுவாக உயர்ந்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், இணைய வழி சுற்றுலா வழிகாட்டி வசதிகள், சுற்றுலாப் பயணிகளின் மனதில் நீங்காத மகிழ்ச்சியான சுற்றுலா அனுபவங்களை அளிக்கும் மலை ஏறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல் என சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு திட்டங்களை மாவட்டந்தோறும் உருவாக்கி, சுற்றுலாப்பயணிகளின் வருகையை உயர்த்தும் வகையிலும், வருவாய் அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சுற்றுலா அலுவலர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், , சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், , கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்துகொண்டனர்.

### 4 – 5 ஆம் வகுப்பு பயிலும்

# சென்னை பள்ளி மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா!

## மேயர் திருமதி ஆர்.பிரியா கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்!

சென்னை,செப்.10-

மேயர் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (09.09.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மேயர் அவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்களிடம் கலந்துரையாடி, பாதுகாப்பாகச் செல்லுமாறும், சுற்றுலா செல்லும் இடங்களில் அவ்விடம் தொடர்பான தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டும் எனவும், மாணவர்கள் கல்வி மற்றும் பொது அறிவு சிந்தனையை இதன் மூலமாக வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



நேற்று (09.09.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா, சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவினை மாணவர்களுடன் கலந்துரையாடி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கல்வியாண்டில் (2025-26) 130 சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5 ஆம் வகுப்பு பயின்று வரும் 5,335 மாணவர்களை, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிர்லா கோளரங்கம், ஆவின் பால் நிலையம், வண்டலூர் உயிரியல் பூங்கா, பெரியார் அறிவியல் பூங்கா, ஐ.சி.எஃப். அருங்காட்சியகம், காவல் அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், வள்ளுவர் கோட்டம், மெரினா கடற்கரை-அண்ணா நினைவிடம் மற்றும் டாக்டர் கலைஞர் நினைவிடம் ஆகிய இடங்களில் ஏதாவது 4 இடங்களுக்கு தமிழ்நாடு அரசின் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இந்தச் சுற்றுலாவானது மண்டலம் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ள 130 சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களை ஒரு பேருந்துக்கு சராசரியாக சுமார் 55 மாணவர்கள் வீதம் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப 97 பேருந்துகளில் மொத்தம் 5,335 மாணவர்கள் ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை கல்விச் சுற்றுலா அழைத்து செல்ல ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

அதன்படி, இன்று (09.09.2025) கோபாலபுரம், கே.சி.கார்டன், ரங்கசாயி, எம்.எச்.சாலை, ஏகாங்கிபுரம் ஆகிய இடங்களில் உள்ள 5 சென்னை பள்ளிகளைச் சார்ந்த 300 மாணவர்கள் பிர்லா கோளரங்கம், பெரியார் அறிவியல் பூங்கா, வள்ளுவர் கோட்டம், கலைஞர் நினைவிடம், காவல் அருங்காட்சியகம், கன்னிமாரா நூலகம் ஆகிய இடங்களுக்கு 6 பேருந்துகளில் முதலாவது நாளில் அழைத்துச் செல்லப்பட்டனர். இதுபோல கடந்த 2024-25ஆம் கல்வியாண்டிலும் சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் கல்விச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டு பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்வில், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) ம.பிரதிவிராஜ், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) திரு.த.விசுவநாதன் மற்றும் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி தொகுதி சோழவரம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட பல்வேறு கிளைகளில் கிளைக் கழக மற்றும் நிர்வாகிகள் ஆய்வு கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆனந்தகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு கிளைக் கழக மினிட் புத்தகங்களை ஆய்வு மேற்கொண்டார். உடன் தொகுதி பார்வையாளர் சுரேஷ் செல்வராஜ், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், பா.செ.குணசேகரன், ஆ.ராஜா, ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளை கழக செயலாளர் கிளைக் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.